இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று முன்தினம் (18.08.2023) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறையின் மூலம் ரூ.2.59 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 8 அரசு ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் திறந்து வைத்தார். உடன் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜன் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

'நீட்' தேர்வைத் திணிக்கும் ஒன்றிய அரசு - தமிழ்நாடு ஆளுநரைக் கண்டித்து

விருதுநகரில் இன்றுமாபெரும் உண்ணாவிரத அறப்போர்!

தெற்கு - வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு வேண்டுகோள்!

விருதுநகர், ஆக.20-

'நீட்' தேர்வை ரத்து செய்யக்கோரி விருதுநகரில் இன்று நடைபெறும் மாபெரும் உண்ணாவிரத அறப்போரில் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்று சிறப்பித்திடுமாறு கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

அவர்களின் அறிக்கை வருமாறு:-

கழகத்தின் இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி சார்பாக' நீட்' தேர்வை ரத்து செய்யக் கோரி இன்று (20.08.2023-ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் விருதுநகர், கலைஞர் திடலில் (தேச பந்து மைதானம்), ஒன்றிய பா.ஜ.க அரசு மற்றும் தமிழக ஆளுநரைக் கண்டித்து மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெறுகிறது.

இந்த உண்ணாவிரத அறப் போரில் விருதுநகர் தெற்கு/வடக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் மற்றும் பகுதி கழக அமைப்பாளர்கள்/ துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக உறுப்பினர்கள் திரளாகக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி-

கோவில்பட்டி - கயத்தாறு ஒன்றியங்களில் - மக்கள் குறைகேட்பு நிகழ்ச்சிகள்!

கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் பி.கீதாஜீவன் பங்கேற்பு!

தூத்துககுடி, ஆக.20-

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களும், சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளருமான பி.கீதா ஜீவன் ஆகியோர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி நிரல் விபரம்

நேரம் நிகழ்ச்சி நடைபெறும் இடம், ஒன்றியத்தின், பெயர், நிகழ்ச்சி விபரம்

வருமாறு- நாள் : 20.8.2023 ஞாயிற்றுக்கிழமை வருமாறு:-

மாலை 6.00 மணி-மூப்பன்பட்டி-கோவில்பட்டி-மத்திய ஒன்றியம் மக்கள் களம்-நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை 6.30 மணி-தோனுகால்-கோவில்பட்டி மேற்கு ஒன்றியம்- மக்கள் களம் நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

இரவு 7.00 சத்திரப்பட்டி மணி-கோவில்பட்டி மேற்கு ஒன்றியம்-மக்கள் களம் நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

இரவு 8 மணி-ஊத்துப்பட்டி-கோவில்பட்டி மேற்கு ஒன்றியம்-மக்கள் களம்-நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை மணி 4 நாள் : 23.08.2023 -புதன்கிழமை-மாலை கே.குப்பனாபுரம் கயத்தாறு கிழக்கு ஒன்றியம்-மக்கள் களம் நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை 5 மணி- தெற்கு வண்டானம் -கயத்தாறு கிழக்கு ஒன்றியம்- மக்கள் களம் நிகழ்ச்சி மூலம் பொது மக்களின்குறை கேட்டல்.

மாலை 6 மணி- வடக்கு வண்டானம்-கயத்தாறு கிழக்கு ஒன்றியம்-மக்கள் களம் நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை 7 மணி-கொப்பம்பட்டி-கயத்தாறு கிழக்கு ஒன்றியம்- மக்கள் களம் நிகழ்ச்சி பொது மக்களின் மணி குறை கேட்டல்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

'நீட்'டை ரத்து செய்யக்கோரி

தென்காசியில் இன்று மாபெரும் உண்ணாவிரத அறப்போர்!

கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர்கள் வே.ஜெயபாலன், ஈ.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

தென்காசி, ஆக.20-

கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநில இளைஞர் அணி,மாநில மாணவரணி,மாநில மருத்துவர் அணி,செயலாளர்கள் ஆகியோர் கூட்டறிக்கை அறிவிப்பின்படி ஒன்றிய அரசையும்,ஆளுநர் ரவியையும் கண்டித்து இன்று (20.8.2023-ஞாயிற்றுக்கிழமை) காலை 900 மணி முதல் மாலை 5 மணி வரை தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன அறப்போர் உண்ணாவிரதம் நடைபெறுகிறது.என தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது.

நீட் தேர்வு தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவை,சிதைத்து அவர்களை மட்டும் இன்றி அவர்தம் பெற்றோரையும் மரணத்தை நோக்கி தள்ளுகிறது.எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும் எனக்கென்ன என்று இருக்கும் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து கழகத் தலைவர்,முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநில இளைஞரணி,மாணவரணி, மருத்துவ அணி, செயலாளர் கூட்ட றிக்கை அறிவிப்பின்படி தென்காசி மாவட்ட கழக செயலாளர்கள், தோழமைக் கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், மாவட்ட தலைவர்கள், நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கண்டன உரையாற்றுகிறார்கள்.இந்த கண்டன உண்ணாவிரத அறப்போராட்டத்தில் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், கிளை,வார்டு பகுதிகளின் இளைஞர் அணியினர், மாணவர் அணியினர், மருத்துவ அணியினர் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள்,மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்,கிளை,வார்டு செயலாளர்கள்,நிர்வாகிகள்,மாநில, மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மற்றும் ஒத்த கருத்துடைய பொதுமக்கள் உள்ளிட்டோர் திரளாக பங்கேற்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

'நீட்'டை ரத்து செய்யக்கோரி - பாளையங்கோட்டையில் இன்று

நெல்லை கிழக்கு - மத்திய மாவட்டங்கள் சார்பில் உண்ணாவிரதம்!

கழகத்தினருக்கு - இரா. ஆவுடையப்பன், டி.பி.எம்.மைதீன்கான் வேண்டுகோள்!

நெல்லை,ஆக.20-

கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநில இளைஞர் அணி,மாநில மாணவரணி, மாநில மருத்துவர் அணி,செயலாளர்கள் ஆகியோர் கூட்டறிக்கை அறிவிப்பின் படி ஒன்றிய அரசையும்,ஆளுநர் ரவியையும் கண்டித்து இன்று (20.8.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 9மணி முதல் மாலை 5 மணி வரை நெல்லை பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி அருகில் மாபெரும் உண்ணாவிரதம் நடைபெறுகிறது.என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது.

நீட் தேர்வு தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும்,கனவை சிதைத்து அவர்களை மட்டுமின்றி அவர்தம் பெற்றோரையும் மரணத்தை நோக்கி தள்ளுகிறது.எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும் எனக்கென்ன என்று இருக்கும் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து கழகத் தலைவர்,முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநில இளைஞரணி,மாணவரணி,மருத்துவர் அணி செயலாளர் கூட்ட அறிக்கை அறிவிப்பின்படி நெல்லை கிழக்கு, மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி, சார்பில் இன்று (20.8.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி அருகில் மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெற உள்ளது.

தமிழ்நாட்டின் கல்வி உரிமையும்,நம் மாணவர்கள்பெற்றோர்களின் உயிரைக் காக்க போராடும் உண்ணாவிரத அறப்போரில்,நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர்கள்,தோழமைக் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், மாவட்ட தலைவர்கள், நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கண்டன உரையாற்றுகிறார்கள்.இந்த கண்டன உண்ணாவிரத அறப்போராட்டத்தில் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், கிளை,வார்டு பகுதிகளின் இளைஞர் அணியினர், மாணவர் அணியினர், மருத்துவ அணியினர் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள்,மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்,கிளை,வார்டு செயலாளர்கள்,நிர்வாகிகள்,மாநில, மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மற்றும் ஒத்த கருத்துடைய பொதுமக்கள் உள்ளிட்டோர் திரளாக பங்கேற்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

துறை சார்ந்த அலுவலர்களுடன்

தென்காசியில் சட்டப்பேரவை மதிப்பீட்டுக்குழுவினர் ஆய்வு!

க. அன்பழகன் எம்.எல்.ஏ. தலைமையில்

தென்காசி, ஆக.20.

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில் தமிழ்நாடு சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் க.அன்பழகன் தலைமையில் குழு உறுப்பினர்கள் ராஜேஷ்குமார் (கிள்ளியூர்)சிவக்குமார் (மயிலம்) ஜவாஹிருல்லா (பாபநாசம்)பரந்தாமன் (எழும்பூர்)ஓ.எஸ்.மணியன் (வேதாரண்யம்)காந்திராஜன் (வேடசந்தூர்)சிந்தனை செல்வன் (காட்டுமன்னார்கோவில்)தமிழ்நாடு சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசன் சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி நாடார், ராஜா,மாவட்ட ஆட்சியர் துரை. ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்.

ஆய்வுக் கூட்டத்தில் விபத்தில் மரணம் அடைந்த தாய் அல்லது தந்தையை இழந்தவர்களின் குழந்தைகள் பயிலும் மாணவ,மாணவியருக்கான நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் குறித்த கால வைப்பு தொகைக்கான ரூபாய் 50,000,ம் மற்றும் 75,000,ம் பத்திரங்களை சட்ட பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் க.அன்பழகன் வழங்கினார்.

பின்னர் சட்டப்பேரவை மதிப்பீட்டு குழு தலைவர் க.அன்பழகன் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க இன்றைய தினம் தென்காசி மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் அரசு திட்டப் பணிகள், நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள்,குறித்து சட்டப்பேரவை மதிப்பீட்டு குழு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.தென்காசி மாவட்டத்தை பொறுத்தவரையிலும் பல்வேறு புதிய வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.புதிதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ரூபாய் 120 கோடி மதிப்பில் கட்டப்பட்டு இன்னும் 4 மாதங்களில் திறக்கும் நிலையில் உள்ளது.கால்நடை மருந்தகம் ரூபாய் 48 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு விரைவாக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது.அரசு தலைமை மருத்துவமனையில் 6 தளங்களுடன் 76,000,ம் சதுர அடியில் ரூபாய் 22 கோடியில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையம் கட்டப்பட்டு வருகிறது.இன்னும் 1 ஆண்டுக்குள் பயன்பாட்டிற்கு வரும். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் கூடுதலாக ரூபாய் 9 கோடி மதிப்பில் கூடுதல் மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. தொகுதிக்கு ஒரு விளையாட்டு அரங்கம் என்று முறையில் நமது விளையாட்டு துறை அமைச்சர் மூலமாக ரூபாய் 15 கோடியில் விளையாட்டு அரங்கத்திற்கு ஒப்பந்தபுள்ளி போடப்பட்டு விரைவாக இந்த பணி நடைபெற இருக்கிறது. காவல்துறையின் தலைமை கட்டிடம் ரூபாய் 54 கோடி மதிப்பில் கட்டி திறக்கும் நிலையில் உள்ளது.மருத்துவ கிடங்கு ரூபாய் 15 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது. விபத்தில் மரணம் அடைந்த தாய்,தந்தை,இறந்தவர்களின் குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ்15 குழந்தைகளுக்கு தலா ரூபாய் 50,000 மற்றும் 75,000,ம் வைப்பு பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டத்தை பொறுத்தவரையில் அனைத்து பணிகளும் முறையாக நடைபெற்று வருகிறது.குறிப்பாக இல்லம் தேடி கல்வி,மக்களை தேடி மருத்துவம், போன்ற பல்வேறு திட்டம் பணிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.இத்திட்டப் பணிகளை மக்களிடம் சிறப்பாக கொண்டு செல்ல வேண்டும் என்று அதிகாரிகளிடம் வலியுறுத்தி உள்ளோம். தமிழ்நாடு முழுவதும் நீர்வளத்துறை மூலமாக இருக்கிற ஆற்றுபாசனத்திற்கு லஸ்கர் இல்லாமல் இருக்கிறது. அதனால் இந்த குழுவின் மூலமாக தமிழ்நாடு முழுவதும் லஸ்கர் வேண்டும் என்ற தீர்மானத்தை தயார் செய்து அனுப்பி இருக்கிறோம். இந்த தீர்மானம் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். மருத்துவர்கள் குறைவு என்ற கோரிக்கைக்கு,மருத்துவர்கள் உடனடியாக துறையின் பிரிவில் அனுப்புவதற்கு பரிந்துரைத்துள்ளோம். அது மட்டுமல்ல எல்லா நோய்களுக்கும், சிகிச்சைகள் அரசு தலைமை மருத்துவமனையில் அளிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளோம்.

நெல்லை அரசு தலைமை மருத்துவமனைக்கு நோயாளிகளை அனுப்புவதை குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம். ரூபாய் 400 கோடிக்கு மேல் தற்போது தென்காசியில் மட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.சுற்றுலா பயணிகளுக்கு தேவைப்படுகின்ற வசதிகளை ஏற்பாடு செய்து தர பரிந்துரைக்கப்படும்.

இவ்வாறு சட்டப்பேரவை மதிப்பீட்டு குழு தலைவர் அன்பழகன் தெரிவித்தார்.

மாவட்ட பள்ளி கல்வித்துறை,குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை,நீர்வளத் துறை, பொதுப்பணித்துறை, பதிவுத்துறை, வணிகவரித் துறை,மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மானிய கோரிக்கைகள் குறித்தும் மாவட்டத்தின் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் மற்றும் நடைபெற வேண்டிய பணிகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர்,மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் எ.த.சாம்சன்,மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி,மாவட்ட வன அலுவலர் முருகன்,பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் அழகிரிசாமி, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொ) ராஜமன்னார் உள்பட அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாவட்டத்தில் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில்

சட்டப்பேரவை நூலகக் குழு ஆய்வுக் கூட்டம்!

குழுவின் தலைவர் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

நெல்லை.ஆக.20-

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில் தமிழ்நாடு சட்டப் பேரவை நூலககுழு தலைவர் எஸ்.சுதர்சனம் தலைமையில் நூலகக்குழு உறுப்பினர்கள் கணபதி (மதுரவாயல்) தியாகராஜன் (முசிறி) ஸ்டாலின்குமார் (துறையூர்) சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசன், மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப. கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையாளர் சிவகிருஷ்ண மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சட்டப் பேரவை நூலகக்குழு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

சட்டப்பேரவை நூலகக் குழுத் தலைவர் எஸ்.சுதர்சனம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள நூலகங்கள் சட்டப் பேரவை நூலக குழுவினால் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நூலகத்திற்கு படிக்க வரும் மாணவ,மாணவிகள் நூலக உறுப்பினர்கள் பயன்படும் வகையில் பல்வேறு வசதிகள்,வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டு,அதை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நெல்லை மாவட்டத்தில் உள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபத்தில் உள்ள நூலகம், அதன் அருகில் உள்ள கலைஞர் அறிவு சார் மையம், மாவட்ட பொது நூலகம்,என். ஜி.ஓ.காலனி, கங்கைகொண்டான் கிளை நூலகம் உள்ளிட்ட நூலகங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக கலைஞர் ஆட்சிக் காலத்தில் தான் அண்ணா நூற்றாண்டு நூலகம் கட்டப்பட்டுள்ளது.இந்த நூலகம் ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாகும். முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு தான் மதுரையில் கலைஞர் நூலகத்தினை திறந்து வைத்தார்கள்.இந்த நூலகம் மாணவர்கள்,கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள்,போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்கள்என சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக அமைகிறது.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் நகராட்சி சார்பாக ரூபாய் 15,02,752 ம் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி சார்பாக 9, 45,419ம், களக்காடு நகராட்சி சார்பாக 13,0,1,114 ம் மாநகராட்சி சார்பாக ரூபாய் 1 கோடியும்,ஊராட்சிகளின் மூலம் ரூபாய் 18.77 லட்சம் ஆக மொத்தம் 1 கோடியே 46 லட்சத்து 26 ஆயிரத்து 285 ரூபாய் சட்டபேரவை நூலககுழு மூலமாக நெல்லை மாவட்ட நூலகத்திற்கு வழங்கப்பட்டது.

நெல்லை மாவட்ட மைய நூலகத்தில் நான் முதல்வன் பயிற்சி பெறுவதற்காக ஏறக்குறைய 141 மாணவர்கள் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.நெல்லை மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் நூலகத்திற்கு சென்று புத்தகங்கள் படிப்பதில் மிகவும் ஆர்வமாக உள்ளார்கள்.இப்பயிற்சியில் மாணவர்களின் தேவைகளை குறித்து முழு உறுப்பினர்களால் கேட்டறியப் பட்டது.ஒரு சில கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அக்கோரிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மற்றும் சட்டப்பேரவை நூலக குழு உறுப்பினர்களால் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு சட்டப்பேரவை நூலககுழு தலைவர் சுதர்சனம் தெரிவித்தார்.

முன்னதாக போட்டித் தேர்வு மாணவர்கள் பயில்வதற்காக தமிழ்நாடு பாட நூல் புத்தகங்கள்,மாவட்ட நூலகங்களுக்கு சட்டப்பேரவை நூலக குழு தலைவர் சுதர்சனம் வழங்கினார்.

நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகம் திட்ட இயக்குனர் சுரேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) சுகன்யா, இணை இயக்குனர் நூலகத் துறை அமுதவள்ளி,உதவி இயக்குனர்(ஊராட்சிகள்) அனிதா மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சின்னராஜ், நூலகர்கள் மற்றும் நூலகத் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

'நீட்' தேர்வு திணிப்பைக் கண்டித்து

சிவகங்கையில் இன்று உண்ணாவிரத அறப்போர்!

கழகத்தினர் திரள்கின்றனர்!

சிவகங்கை. ஆக. 20-

தமிழக முதல்வரும், கழகத்தின் தலைவருமான தளபதி மு. க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரிலும், மாநில இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு த்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை யின் பேரில் இன்று மாவட்ட தலைநகரங் களில் இளைஞர் அணி, மருத்துவர் அணி, மாணவர் அணி, சார்பில் மத்திய அரசு நீட் தேர்வை திரும்ப பெற கோரியும் ஆளுநர் ரவியை கண்டித்தும் உண்ணாவிரதம் நடைபெறுகின்றது.

இதன்படி சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் வழிகாட்டுதலின் பேரில் சிவகங்கை மாவட்ட இளைஞரணி மருத்துவர் அணி மாணவரணி சார்பில் காலை 9 மணி அளவில் சிவகங்கை சண்முகராஜா கலையரங்கில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் தலைமையில் மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் மருத்துவர் குமரேசன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி .ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் உண்ணாவிரதம் நடைபெறுகின் றது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இளைஞரணி, மாணவரணி, மருத்துவர் அணி, மாவட்ட துணை ஒன்றிய நகர, பேரூர், கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். உண்ணாவிரதப் போராட்டத்திற்கான ஏற்பாடுகளை இளைஞர் அணி, மருத்துவரணி, மாணவரணி நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.